**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-19 No. 04 October-December 2025**

# சங்க இலக்கியத்தில் முல்லைத் திணையில் தலைவன் தலைவியின் மன வெளிப்பாடு

**செ.முத்தமிழ் செல்வி, (**பதிவு எண்: **R20162960)**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
E-Mail Id: selva.smts@gmail.com

**முனைவர்.மு.ராஜலெட்சுமி,**

ஆராய்ச்சி நெறியாளர் மற்றும் உதவிப் பேராசிரியர்,

தமிழ் உயராய்வு மையம்,

கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

முத்துப்பேட்டை, இராமநாதபுரம் – 623523.
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.
E-Mail Id: m.munishiakshmi@gmail.com

**DOI:** 10.5281/Arimaa.19042502

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனின் வாழ்வில் மனவெழுச்சி இன்றியமையாத இடம் வகிக்கின்றது. மனவெழுச்சி என்பது தூண்டிவிடப்பட்ட மனநிலை அல்லது மன உணர்ச்சி ஒட்டுமொத்தமாக மேலோங்கி நிற்கும் நிலை என்றும் உளவியலாளர் விளக்குகின்றனர். சினம், அச்சம், அன்பு ஆகிய மூன்று மெய்ப்பாடுகளை அடிப்படை மனவெழுச்சிகள் என்று குறிப்பிடுகின்றனர். அறிஞர் பெருமக்கள், இவ்வகையில் முல்லை நிலத்தை இருப்பிடமாகக் கொண்ட தலைவன், தலைவியர் அந்நிலம் சார்ந்த சூழ்நிலைகள், அங்கு நடக்கக்கூடிய புறச் செயல்பாடுகள், தாவரங்கள், விலங்குகளின் செயல்பாடுகள், மனித மனங்களை இன்ப நிலையிலும், துன்ப நிலையிலும் பாதிக்கின்றன. மேலும் மனித வாழ்க்கை மாற்றத்திற்கு காரணமாக அமைகின்றன என்பதை ஆய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்** : சங்க இலக்கியம், முல்லைத்திணை, மனித வாழ்வில் உயர்வு, சினம், அச்சம், அன்பு, தலைவன், தலைவி சூழ்நிலைகள், நிலம்.

**முன்னுரை**

முல்லைத்திணை பாடல்களில் பெரும் பகுதி வினைத் தொழில் எனும் பொருளீட்டும் கடமை அதிகமாக சுட்டப்பட்டுள்ளது. வேனிற் காலத்தின் காலத்தின் தொடக்கத்தில் வருவதாக முல்லைத்திணை பாடல்கள் கூறுகின்றன. இக்கட்டுரையில் அக மாந்தர்களாக உள்ள தலைவன் தலைவி இவர்களின் உணர்வுகள், பாசறையில் உள்ள தலைவனின் செயல்பாடுகள், தலைவனின் அருள் உள்ளம், வினை முடித்து மீளும் தலைவனின் நிலை,

செலவு ஒலித்த தலைவனின் செயல்பாடுகள், கார்காலத்தில் வரும் தலைவனின் இன்ப நிலை, தலைவி தலைவன் மேல் கொண்ட அன்பு, இல்லற வாழ்வில் தலைவன் தலைவிக்கு இடையே நிகழும் இன்ப நிகழ்வுகள், தலைவியின் கற்பு நிலை, இவையாவும் முல்லை நிலத்தில் இருக்கும் சூழல் அடிப்படையில் தலைவன், தலைவியின் மன வெளிப்பாடுகளாக அமைகின்றன என்பதனை ஆய்ந்து அறிவதை கட்டுரையின் நோக்கமாகும்.

**தலைமகன் மாண்புகள்**

களவு, கற்பு வாழ்வில் தலைவன் பெரும் இடம் சிறப்பிற்குரியது. தலைவன் என்பவன் இலக்கிய காலம் முதல் இன்று வரை வியத்தகு பெருமை பெற்றவனாகவே திகழ்கின்றான். கல்வி, கேள்வி, வீரம், விளையாட்டு, கொடை, அன்பு என அனைத்து நிலைகளிலும் முதன்மையுடையவனாகவும், அன்பு கொண்டவனாகவும் படைக்கப்படுகின்றான்.

**பாசறைத் தலைவன் நிலை**

வேந்தனுக்குப் போரில் உதவிடத் தலைவன் தலைவியைப் பிரிந்து போர் வினையை மேற்கொண்டு பாசறையில் தங்கியிருந்தான். கார்காலம் வந்து மழையை பொழிந்தது. தலைவியிடமிருந்து தூதுவர் தலைவனிடம் சென்று செய்தியை கூறினர். அச்செய்தியானது தனக்கு மிகுந்த துன்பத்தைத் தருகின்றது. இவ்வாறு நாள் வருந்தும் துன்பத்தை அவள் அறிந்தாள் நல்லது என்று கூறினான் தலைவன். நான் மன்னனின் பாசறையில் உள்ளேன் அவளது நிலை என்னவோ என நெஞ்சம் துடிக்கின்றான். என்பதனை,

**வினைவயின் பெயர்க்குந் தானைப்,**
**புனைதார், வேந்தள் பாசறை யேமே!.**(1)

என்னும் அகநானூற்றுப் பாடல் சுட்டுகிறது. பாசறைத் தலைவனின் துன்ப நிலையை இப்பாடல் தெளிவு படுத்துகிறது.

**செலவழுங்கல்**

கார்காலத் தொடக்கத்தில் தலைவன் திரும்பி வந்தான். தன் கடமையை செய்ய செல்லாமல் தலைவியின் வருத்தத்தை போக்க செலவு ஒழிந்து நின்ற தலைவனின் நிலையை முல்லைத் திணைப்பாடலில் காண முடிகிறது. தலைவன் தான் மேற்கொண்ட படைத்தலைமைக் கடமையை முடித்தான். தலைவியிடம் திரும்பினான். வெற்றிவேல் மன்னன் போரினைத் தவிர்த்தான் அதனால் "நான் போர் மேற்செல்வதை தவிர்த்தேன்" என்று தலைவியிடம் கூறினான். இதனை,

**வென்வேல் வேந்தன் அருந்தொழில் கூர்ந்து இனி**
**நன்னுதல் யானே செலவொழிந்தனனே.**(2)

என ஐங்குறுநூறு பாடல் சுட்டுகிறது. தலைவன் பிரிவைத் தலைவி ஆற்ற முடியாது என்பதால் தலைவன் பிரிவினைத் தாமதித்தலும் உண்டு.

தலைவன் பிரிவைக் கண்டு தலைவி துயறுற்றதால் தலைவன் பிரிவை சிறிது காலம் நீடித்த பின் மேற்கொள்ளளாயினான்.

**செலவிடை அழங்கல் செல்லாமை அன்றே**
**வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும்.** (3)

என்ற நூற்பாவின் மூலம் செலவழங்கள் என்னும் அக மரபினை அறிய முடிகிறது.

**பிரிவதற்கு முன் தலைவியை தேற்றுதல்**

தலைவன் பிரிவதற்குமுன் தலைவியை தேற்றுதலின்றிச் செல்வதில்லை. அவளிடம் இல்லறக் கடமையினை எடுத்துக் கூறிவிட்டுப் பின்பு பிரிவினை மேற்கொள்வான். இதனை,

**துன்புறு பொழதினும் எல்லாம் கிழவன்**
**வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும்.**(4)

என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறிய முடிகிறது.

மற்றொரு ஐங்குறுநூற்றுப் பாடல் தலைவன் தலைவியிடம் கார்பருவம் தொடங்கியக் காலத்தைக் கண்டு நீ பிரிவுக்கு உடன்படவில்லை. போரை மேற்கொண்டுள்ள மன்னனும் பாசறை இருட்டுக்கு அவனுடைய காதலியை பிரிந்து வரப்போவதில்லை அதனால் நான் செல்வதை தவிர்த்தேன் என்று கூறினான். இதனை,

**போருடை வேந்தன் பாசறை**
**வாராள் அவன் எனச் செலவழங்கினளே.**(5)

எனப் பாடல் சுட்டுகிறது.

**தலைவியை பாதுகாக்கும் தலைவன்**

மேகம் மலையை பெய்யத் தொடங்கியது. அந்த மிகுதியான மழையால் தேர் செலுத்த முடியவில்லை. அதனால் மன்னன் தான் மேற்கொண்ட வினையை தவிர்த்தான். அதனால் நான் மன்னருக்கு செய்யும் தொழிலை விட்டு உன்னை பாதுகாக்கும் தொழிலை மேற்கொண்டேன். என்று தலைவியிடம் கூறினான். இதனை ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டுகிறது. மழை மிகுதியாக பெய்ததால் தேர் செல்லாதபடி தடை ஏற்பட்டது. தலைவி அழுவதினால் நானும் செல்வதைத் தவிர்த்தேன் என்று தலைவன் கூறுவதாக பாடல் அமைகிறது.

தலைவன் கற்பு காலத்தில் அன்பு மிக்கவாக கருதப்பெறுகின்றான். பொருள் தேடுதல் பொருட்டும் வேந்தனின் வினையை முடிதற்பொருட்டும் செலவினை மேற்கொள்கிறான் தலைவன். தலைவி மீது கொண்ட காதலை,

**கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டோடி கண்ணே உள. (6)**

என குறள் சுட்டுகிறது. களவு மற்றும் கற்பு காலத்தில் தலைவன் உணர்வு நிலையானது. உளவியல் அடிப்படையில் அமைந்த உணர்வு நிலையாகும். இதனை உணர்த்தும் பொருட்டாக அகப்பாடல் அமைகிறது.

**பொருள் தேடச் செல்லும் தலைவன்**

பொருள் தேடச் சென்றான் தலைவன். வினை முடிந்த தலைவன் தலைவியை காண வேண்டும் என்கின்ற பெரு வேட்கையுடன் தேரில் வேகமாகச் செல்கிறான். ஆனால் அவன் மனமோ அவன் ஓட்டிச் செல்லும் தேரை விட வேகமாகச் செல்கிறது. இதனை குறுந்தொகைப் பாடல்

**வரைகோள் அறியாச் சொன்றி**
**நிரை கோற் குறுந்தொடி தந்தை ஊரே.(7)**

என்ற வரியின் வழி அறியலாம். இப்பாடலில் களவுக் காலத் தலைவன் பொருள் தேடப் பிரிந்தமை சுட்டப்படுகிறது. வினை முடிந்து மீளும் தலைவன் தலைவியை காண வேண்டும் என்கின்ற வேட்கை மனதுடன் வருவதை காண முடிகின்றது.

**தலைவியோடு விளையாடி மகிழ்தல்**

தலைவன் கற்புக் காலத்தில் தலைவியோடு சேர்ந்து இருத்தலால் மன மகிழ்வோடு இருப்பதாக முல்லைத்திணைப் பாடல் வழி அறிய முடிகிறது. ஆறு, குளம், சோலை போன்ற இயற்கை சூழலில் விளையாடி மகிழ்வான். இதனையே,

**காயா, கொன்றை நெய்தல் முல்லை**
**போதவிழ் தளவு மொடு.(8)**

என்ற பாடலில் தலைவன் சோலையிடத்து விளையாடி மகிழ்ந்ததை அறிய முடிகிறது.
மேலும்,

**யானும் குளனும் காவும் ஆடிப்**
**பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப. (9)**

இந்நூற்பாவின் மூலம் முல்லைத் திணைப் பாடல்கள் தொல்காப்பிய அக மரபினைத் தழுவி உள்ளதை அறிய முடிகிறது.

**தலைவிக்குரிய மனக்கட்டுப்பாடு**

தலைவன் வினை மேற்கொள்ளும் பொருட்டு தலைவியைப் பிரிந்து சென்றபோதும் தலைமகள் ஆற்றாதவளாய் கேட்பாரின்றித் தலைவி கூற்று நிகழ்த்துவாள். தலைவன் பிரிவால் வாடும் தலைவி தலைவன் இருக்கும் இடம் சென்று சேர்வதில்லை இவை தலைவிக்குரிய அக மரபாகக் கருதப்படுகிறது. இதனை தொல்காப்பியம்,

**உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்**
**எண்ணுற் றனகொல் இவையெனில் அல்லதைக்**
**கீழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.** (10)

என்று விளக்குகிறது. தலைவியானவள் தலைவன் பிரிந்த போதும் அவனைத் தேடிச் செல்லாமல் அவன் வருகைக்காக காத்துக் கொண்டு இருப்பதே தமிழர் மரபாகக் கருதப்படுகிறது.

**தலைவி புலம்பல்**

வினை மேற்கொண்ட தலைவன் கார்காலத்தில் மீண்டு வருதல் என்பது மரபாகும். ஆனால் தலைவனானவன் அக்காலம் வந்த பொழுதும் திரும்ப வராமையால் தலைவி புலம்புகிறாள். இதனை

கார்**செய்** கா**லை**யோடு கையற**ப்** பிரிந்தோர்
தேர்தரு விருந்தி**ள்** தவி**ற்**குதல் யாவது**.** (11)

கார்காலம் தொடங்கியும் தலைவனால் வர முடியாது என்று அரசனின் செய்தி கூற கேட்ட கலைமகள் புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**பிராய்டு தத்துவம்**

உள்ளே அழுத்தி வைக்கப்பட்ட ஆசைகளின் மாறுவேடத் தீர்வே கனவு என்கிறார் பிராய்டு. கனவினை உண்மை என்று நினைப்பதும், உண்மை நிலையினை கனவாக நினைப்பதும் மனித மனதின் இயல்பாக உள்ளது. கார்காலம் வந்தும் தலைவன் வராததால் இது கார்காலம் அன்று என தலைவன் வருவதே கார்காலம் என்று தலைவி கனவாகக் கூறுகிறாள். தோழி அதற்கு இது கனவு அன்று என்று கூறுகின்றாள். இதனை,

**கார் அன்று என்றி ஆயின்**
**கனவா மற்றும் இது? வினைவுவல் யானே.** (12)

என்ற பாடலடிகள் வழி அறியலாம். எனவே, தலைவி தலைவன் வருவான் என்பதையே நினைத்து மனதளவில் பெரும் துன்பம் அடைகின்றாள் என்பதனை அறிய முடிகிறது.

**ஆளுமைப் பிரிவு**

பேசாதானவற்றைப் பேசுவது போலவும், கேட்காதவற்றைக் கேட்பது போலவும் கொண்டு அவற்றுடன் பேசுவது ஒரு மனநிலை ஆகும். இலக்கியத்தில் இதை ஒரு உத்தியாகப் பயன்படுத்தினாலும் உளவியல் நிலையில் இஃது ஆளுமை பிளவு பட்ட நிலையாகவே காணப்படுகிறது. இங்கு,

**கேட்குந போலவும் கிளக்குந போலவும்**
**இயக்குந போலவும் இயற்றுந போலவும்**
**அஃறினை மருங்கினும் அறைப் படுமே.** (13)

என்று நன்னூலர் கூறுவது நோக்கத்தக்கது. பிரிந்து சென்ற தலைவனைப் பார்த்து, தலைவியை விட்டு வந்தாயே என்று முல்லை சிரிக்கிறது. அதற்குத் தலைவன் முல்லையே சிரிக்காதே என்று கூறுவதனை,

**கார் புறந்தந்த நீருடையவியன் புலத்துப்**
**பல்ஆ புகுதரூஉம் மாலை**
**முல்லை! வாழியோ முல்லை – நீ நின்**
**சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை**
**நகுவை போலக் காட்டல்**
**தருமோ, மற்ற - இது தமியோர் மாட்டே.** (14)

என்ற பாடல் வழி தலைவன் மனநிலையை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

பாசறையில் தங்கும் தலைவன் தலைவியின் நினைவாக இருப்பதையும், தலைவியை விரைந்து காண வேண்டும் என்ற மனப்பான்மை உடையவராக இருத்தலை முல்லை திணைப் பாடல் சுட்டுகின்றன. திருமணத்திற்கு முன்பாகவும் தலைவன் பொருள் தேடிச் சென்றதை பல பாடல்கள் சுட்டுகின்றன. கார்காலத் தொடக்கத்தில் தலைவன் தலைவியுடன் இணைந்து இன்பமாக இருத்தலையும் தலைவன் நறுமணம் கமழும் முல்லைக் காட்டில் தலைவியுடன் இனிமையாக கழித்ததையும் ஐங்குறுநூறு பாடல் சுட்டுகிறது.

முல்லை நிலத் தலைவி தன் மனதில் பற்றி இருக்கும் காமத் துயரை அடக்கியவாறு தலைவன் சென்று வினை முடித்து மீளும் வரை பிரிவை பொறுத்திருப்பவளாய் தலைவன் வீரமுடன் வினையாற்றிப் பொருளோடும் புகழோடும் வீடு திரும்புதலை விரும்புவளாக வாழ்ந்து வந்தனர். மழை பெய்வதும் முல்லை முகில்வதும் கார்காலத்து அறிகுறியல்ல.

தலைவன் வரும் காலமே கார்காலம் என தலைவி உறுதியான மனத்துடன் தலைவனின் வருகைக்காக தலைவி காத்திருக்கும் மனவெளிப்பாடை அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம் :**

1. புலியூர்கேசிகன், (உ.ஆ). ‘அகநானூறு’ - பா. 84, ப – 185.
2. சுப்பிரமணியம், ச.வே. ‘சங்க இலக்கியம்’ பா 426, ப. 341.
3. தமிழண்ணல், (உ.ஆ). ‘தொல்காப்பியம்’ பொருள் – நூ – 1131, ப.384.
4. ‘மேலது’ – நூ – 1130, ப.384.
5. சுப்பிரமணியம், ச.வே. ‘சங்க இலக்கியம்’, ‘ஐங்குறுநூறு’ - பா 427, ப. 342.
6. டாக்டர் மு.வ, (உ.ஆ). ‘திருக்குறள்’ - 1101, ப.111.
7. புலியூர் கேசிகன், (உ.ஆ). ‘குறுந்தொகை’ - பா 233, ப. 234.
8. புலியூர் கேசிகன், (உ.ஆ). ‘ஐங்குறுநூறு’ - பா 420, ப. 157.
9. தமிழண்ணல், (உ.ஆ). ‘தொல்காப்பியம்’, கற்பியல் – நூ – 1137, ப.386.
10. ‘மேலது’ – நூ – 1148, ப.391.
11. முருகசாமி, (உ.ஆ). ‘ஐங்குறுநூறு’ - பா 451, ப. 360.
12. புலியூர் கேசிகன், (உ.ஆ). ‘குறுந்தொகை’ - பா 148, ப. 153.
13. திருஞானசம்பந்தர், ‘நன்னூல்’, சொல் – நூ – 409, ப.107.
14. புலியூர் கேசிகன், (உ.ஆ). ‘குறுந்தொகை’ - பா 162, ப. 167.

**முகவரி**

**செ. முத்தமிழ் செல்வி,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஆஞ்சலோ நகர், முத்துப்பேட்டை,
இராமநாதபுரம் மாவட்டம் - 623 523
**Email ID : selva.smts@gmail.com**